# தரம் - ஆசான்கள்

“தரம்” மற்றும் “தரக் கட்டுப்பாடு” என்பவற்றிற்கு 1950 களின் முற்பகுதியில் அமெரிக்கர்களினால் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் விளைவாக, முகாமைத்துவ ஆலோசகர்கள் இதன் மீது தமது கவனத்தைச் செலுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், இந்த எண்ணக்கரு யப்பானில் 1950 களின் பிற்குதியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ ஆலோசகர்கள் இந்த எண்ணக்கருவினை மேலும் விருத்திசெய்திருந்தனர்.இது யப்பானின் தொழிற்சாலைகளுக்கும் பரவியிருந்தது. இறுதியில், இது மேற்கத்தேய முகாமைத்துவ நிபுணர்களினால் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், அவர்கள் யப்பானிய நிறுவனங்களினால் அடையப்பெற்ற தரக் கட்டுப்பாட்டின் வெற்றிகரமான செய்முறையினைப் பின்பற்றுகின்ற போக்கினைக் கொண்டிருந்தனர்.

தரக் கட்டுப்பாட்டின் எண்ணக்கருவினை மதிப்பிடுகையில் தரத்தில் நிபுணத்துவம் பெற்ற சில ஆசான்கள் சம்பந்தப்படுவதை மறக்கமுடியாது.

கலாநிதி எட்வேர்ட் டெமிங் தர எண்ணக்கருவினை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தியிருந்ததுடன், நிறுவனமொன்றின் 94% ஆன பிரச்சனைகள் தர விடயங்களின் காரணமாகவே ஏற்படுகின்றது என்றும் தெரிவித்திருந்தார்.டெமிங்கினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 14 விடயங்கள் நிறுவனமொன்றினைத் தெளிவாகக் காட்டுகின்றன. இது,நிறுவனமொன்றின் மொத்த உருவப்படத்தையும் காட்டுகின்றது.



கலாநிதி எட்வேர்ட் டெமிங்

**பிறப்பு** ஒக்ரோபர் 14,1900,சியோக்ஸ் நகரம்,
லோவா,ஐக்கிய அமெரிக்க இராச்சியம்

**இறப்பு** திசெம்பர் 20,1993 (93 வயது)
வோஷிங்ரன் டிசி, ஐக்கிய அமெரிக்க இராச்சியம்

**துறைகள்** புள்ளிவிபரவியலாளர்

டெமிங்கினால் விருத்திசெய்யப்பட்ட “பீ.டி.சி.ஏ” எண்ணக்கரு உலகளாவியரீதியில் பிரபல்யமானது என்பதுடன், யாப்பானியர்களுக்கு தரத்தினை அறிமுகப்படுத்தியதில் அவரே முன்னோடியாவார்.

பின்னர் கலாநிதி ஜோசவ் யூறன் தர மூவியலினை அறிமுகப்படுத்தியிருந்தார். தர மூவியல் என்பது தரத்தை திட்டமிடல், தரக் கட்டுப்பாடு மற்றும் தரத்தை மேம்படுத்துதல் என்பவற்றைக் கருதுகின்றது. இந்த 3 படிமுறைகளும் சிறந்த முகாமைத்துவமொன்றிற்கு அவசியமானதாகும்.



**பிறப்பு** திசெம்பர் 24,1904
பிறைலா,றோமானியா

**இறப்பு** பெப்ரவரி 28,2008 (103 வயது)
றேய்,நியூயோர்க்,ஐக்கிய இராச்சியம்

**தொழில்** முகாமைத்துவ ஆலாசகர், தர

கலாநிதி ஜோசவ் எம் ய◌ூறன்

இந்த எண்ணக்கருவினை டெமிங் மற்றும் யூறான் யப்பானுக்கு அறிமுகப்படுத்தியதன் பின்னர், கலாநிதி இஷிகாவா 7 அடிப்படை தரக் கட்டுப்பாட்டு சாதனங்களை விருத்திசெய்திருந்தார். அவையாவன, பரிசீலனைத் தாள் (Check Sheet) பணிவரலாறு (Histogram),பறிரோ பகுப்பாய்வு (Pareto Analysis), ஸ்கற்றர் வரிப்படம் (Scatter Diagram),செயல்றை கட்டுப்பாட்டு அட்டவணை (Process Control Chart) ,ஒழுங்குபடுத்துதல் (Stratification) மற்றும் காரணியும் தாக்கமும் வரிப்படம் (Causes & Effect diagram). காரணியும் தாக்கமும் வரிப்படம்(Causes & Effect diagram). இஷிகாவ வரிப்படம் அல்லது முள் வரிப்படம் (Fish born) என்று அழைக்கப்படுகின்றது.



கலாநிதிகௌர◌ூ இஷிகாவ

| | |
|---|---|
| **பிறப்பு** | யூலை 13,1915,ரோக்கியோ,யப்பான் |
| **இறப்பு** | ஏப்பிறில் 16,1989 (73 வயது) |
| **பிரஜாவுரிமை** | யப்பான் |
| **துறைகள்** | தரம், இரசாயன இயந்திரவியலாளர் |
| **நிறுவனங்கள்** | ரோக்கியோ பல்கலைக்கழகம், முஷாஷி தொழில்நுட்ப நிறுவகம் |
| **பல்கலைக்கழகம்** | ரோக்கியோ |

பின்னர்,மொத்த தரக்கட்டுப்பாட்டு எண்ணக்கரு கலாநிதி ஆர்மண்ட் விவேயின்பாம் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டது.இவர், வாடிக்கையார்களிர்களின் திருப்திக்கு தரத்தை விருத்தி செய்தல், தரத்தைப் பராமரித்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் என்பன அத்தியவசியமானவை என்று குறிப்பிட்டுள்ளார்.ஆகவே, இவர் நிறுவனமொன்றின் உற்பத்திப்பொருளின் தரத்தை அல்லது சேவையை அதிகரிக்கும் நோக்கில் 3 விடயங்களை வலியுறுத்துகின்றார்.

அவையாவன - தரமான தலைமைத்துவம்

புதிய தர தொழில்நுட்பம்

நிறுவனம்சார்ந்த அர்ப்பணிப்பு



**பிறப்பு** 1922

**தொழில்** இயந்திரவியலாளர் மற்றும் தரக் கட்டுப்பாடு

யூனியன் கல்லூரியிலிருந்து பட்டப்படிப்பு,மஸ்சசுசெற்ஸ் தொழில்நூட்ப நிறுவகத்திலிருந்து (எம்.ஐ.ரி) முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்கள்

ஆர்மண்ட் விவேயின்பாம்

மற்றுமொரு தர ஆசான் ஜேனிசி ராகுசி.இவர் ஏனைய காரணிகளில் அவதானம் செலுத்துவதிலும் பார்க்க உற்பத்திப்பொருளின் வடிவமைப்பு மிகவும் முக்கியமானது என்று தெரிவித்திருந்தார்.



கலாநிதி.**ஜேனிசி** ராகுசி

**பிறப்பு** சனவரி 1, 1924, ரோகாமசி, யப்பான்

**பிரஜாவுரிமை** யப்பான்

**துறைகள்** இயந்திரவியலாளர், புள்ளிவிபரவியல்

**நிறுவனங்கள்** _ஒயாமா காகுன் பல்கலைக்கழகம்

**பல்கலைக்கழகம்** குயுசுபல்கலைக்கழகம்

**அனுபவங்கள்** ராகுசி முறைமை

ஷேகிஓ ஷிங்கோ `உடனேயே செய்தல்` ( Just in Time ) என்பதன் மீது கவனத்தைச் செலுத்தியிருந்த மற்றுமொரு தர ஆசானா வார்.இவர், பிழைகள் அடிக்கடி பரிசோதிக்கப்படுதல் வேண்டும் என்றும் இந்த பிழைகள் உடனடியாகத் திருத்தப்படுதல் வேண்டும் என்றும் எப்போதும் குறிப்பிட்டிருந்தார். வாடிக்கையாளருக்கு பிழையுடன்கூடிய உற்பத்திப்பொருட்கள்/ சேவை சமர்ப்பிக்கப்படுகையில் அவை குறையுள்ள பொருட்கள் அல்லது சேவையாக மாற்றப்படுகின்றது.ஆகவே,இவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னரே தவறைத் திருத்துதல் என்பது மிகவும் முக்கியமாகும்.இவர், ரொயாட்டா உற்பத்தி முறைமையை அறிமுகப்படுத்துவதில் பங்காளியாக விளங்கியிருந்தார்.



□□□□□□□ 1909-1990, யப்பான் சாகாநகரம்

ஷேகிஓஷிங்கோ

தரத்தில் மேற்கத்தைய ஆசான் பீலிப் பி. குறோஸ்பி ஆவார்.இவர் தரம் இலவசமானது என்று கூறினார்.இதற்கும் மேலதிகமாக தரம் என்பது ப குறைபாடுகளற்றது என்று கூறினார்.ஆகவே,இவார் தரம் என்பதை இவ்வாறு விபரித்துள்ளார்

- தரம் தேவைப்பாடுகளுடன் இணங்குவதாகும்.
- தர முறைமை முற்கப்பானது.
- தரச் செயற்பாடு குறைபாடற்றது.
- தரத்தினை அளவிடுதல் இணக்கப்பாடின்மையின் விலையாகும்.


பீ லிப் குறோஸ்பி

**பிறப்பு** பிலிப் பயார்ட் குறோஸ்பி
யூன் 18, 1926
வீலிங் மேற்கு வேர்ஜினியா ஐக்கிய அமெரிக்க இராச்சியம்

**இறப்பு** ஓகஸ்ட் 18, 2001 (75 வயது)
வின்ரர் பார்க், புளோறியா, ஐக்கிய அமெரிக்க இராச்சியம்

ரொம் பீற்றர் மற்றுமொரு தர ஆசானாவார்.இவர் தரத்தின் மையம் தலைமத்துவம் என்று கூறினார்.இவார் முகாமைத்துவம் என்ற பதத்திலும் பார்க்க தலைமைத்துவம் என்ற பதத்தினையே பயன்படுத்தியிருந்தார். ஏனெனில் தலைமைத்துவம் முகாமையாளர்களை வாடிக்கையாளர்களுடனும் மக்களுடனும் தொடர்பினை வைத்துக்கொள்வதற்கும் புத்தாக்கமுடைய அணுகுமுறைகளை ஆக்குவதற்கும் செய்கின்றது. இதுவே திறமைக்கான வழியென்று இவர் நம்புகின்றார்.



**பிறப்பு** நவம்பர் 7, 1942 ( 67 வயது)
பல்டிமோர்,மறிலாண்ட்

**பிரஜாவுரிமை** ஐக்கிய இராச்சியம்

**தொழில்** நூலாசிரியர், ஆலோசகர்

மற்றுமொரு மறக்கமுடியாத தர ஆசான் கலாநிதி வோல்டர் ஷேவர்ட் ஆவார்.இவர் தரக் கட்டுப்பாட்டில் மிகவும் முக்கியமான சாதனமான செயல்முறைக் கட்டுப்பாட்டு அட்டவணையை (Process Control Chart) அறிமுகப்படுத்தியிருந்தார். செயல்முறைக் கட்டுப்பாட்டு அட்டவணை உற்பத்திப்பொருளின் அல்லது சேவையின் செயல்முறையின் சரியாந் தன்மையை அவதானிப்பதற்கும், பேணுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.



**பிறப்பு** மார்ச் 18,1891,நியூ கன்ரன், இல்லினோய்ஸ்

**இறப்பு** மார்ச் 11,1967

**துறைகள்** பௌதீகம்,இயந்திரவியல்,புள்ளிவிபரவியல்

**நிறுவனங்கள்** வேஸ்ரன் இலக்றிக்ஸ்

இல்லினோய்ஸ் பல்கலைக்கழகம்

பேக்கலி கலிபோனியா பல்கலைக்கழகம்

**கலாநிதி வோல்டர்**


எழுதியவர் - உபாலி மாரசிங்ஹ

பணிப்பாளர்

தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

இலங்கை.